செ.வெ.எண்:809 நாள்: 11.12.2020

## தஞ்சாவூர் மாநகராட்சியில்வாக்காளர் பட்டியல் விழிப்புணர்வுகையெழுத்து இயக்கத்தினைமாவட்டஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ் இஆப.,அவர்கள் துவக்கிவைத்தார்

தஞ்சாவூர் புதியபேருந்துநிலையத்தில் வாக்காளர் பட்டியல் விழிப்புணர்வுகையெழுத்து இயக்கத்தினைமாவட்டஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ் இஆப.,அவர்கள் இன்று(11.12.2020) துவக்கிவைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்18 வயதுபூர்த்தியடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயரைசேர்த்துக் கொள்வதுகுறித்தவிழிப்புணர்வுகையெழுத்து இயக்கத்தைமுதல் கையெழுத்திட்டுமாவட்டஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கிவைத்தார். தொடர்ந்து,வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயரைசேர்ப்பதன் அவசியம் குறித்தவிழிப்புணர்வுதுண்டுப் பிரசுரங்களைபேருந்துகளில் இருந்தபொதுமக்களிடம்மாவட்டஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், 18 வயதுபூர்த்தியடைந்தஇளைஞர்கள்,மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் புதியவாக்காளர் சேர்க்கைபடிவத்தினைமாவட்டஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர்,மாவட்டஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இந்தியதேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி,டிசம்பர் 15ஆம் தேதிவரைவாக்காளர் பட்டியல் சிறப்புசுருக்கதிருத்தம் நடைபெறுகிறது. வருகின்ற 12.12.2020 மற்றும் 13.12.2020 ஆகியநாட்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்,நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பானசிறப்புமுகாம்கள் நிர்ணயிக்கப்பட்டவாக்குச்சாவடிமையங்களில் நடைபெறுகிறது. வாக்காளர் பட்டியலில் புதிதாகபெயர் சேர்ப்பதற்குபடிவம் - 6,வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்வதற்குபடிவம் - 7,வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்குபடிவம் - 8 ,ஒரேதொகுதிக்குள் குடியிருப்புமாறியவர்கள் புதியகுடியிருப்பில் முகவரிமாற்றம் செய்யபடிவம் - 8ஏஆகியவற்றைபயன்படுத்தவேண்டும்.வாக்களர் பட்டியலில் புதிதாகபெயர் சேர்ப்பவர்கள் பிறப்புசான்று,பள்ளிமாற்றுச் சான்று,மதிப்பெண் சான்றுஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைவயதுசான்றாகவும், ரேஷன் ஸ்மார்ட் கார்ட்,ஓட்டுனர் உரிமம்,கடவுச்சீட்டுஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைமுகவரிசான்றாகவும் சமர்ப்பிக்கவேண்டும். இந்தஅரியவாய்ப்பைபயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனமாவட்டஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ் இஆப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போதுதஞ்சாவூர் மாநகராட்சிஆணையர் திருமதி. ஜானகி ரவீந்திரன்,தஞ்சாவூர் வருவாய் கோட்டஅலுவலர் திருமதி.வேலுமணி,தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன்,தஞ்சாவூர் நகர் நலஅலுவலர் திரு.நமச்சிவாயம் மற்றும் அரசுஅலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்திவெளியீடு :- செய்திமக்கள் தொடர்புஅலுவலர்,தஞ்சாவூர்.